Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 322/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | செந்தில்குமார் |
| Father's Name | – | மயில்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 1st September 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாலக்காடு ரோட்டில் குடியிருந்து கொண்டு பொக்கே ஷாப் நடத்திவருகிறேன். கடந்த 14.02.2019 ம் தேதி காலை 10 மணியளவில் நான் மகாலிங்கபுரத்தில் உள்ள என் நண்பர் ராஜேஷ் வீட்டிற்குச் சென்றேன். மேற்படி ராஜேஷ் வீட்டில் நடந்த திருட்டு சம்பந்தமாக கேட்டு வரலாம் என்று சென்றிருந்தேன். என்னோடு முத்துசாமி என்பவரும் உடன் இருந்தார். அப்போது போலிசார் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2 வதாக சாட்சி கையெழுத்து செய்தேன். பார்வை மகஜர் **அசாஆ.2** ஆகும். . இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ராஜேஷ் வீட்டிற்கு மகாலிங்கபுரம் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ½ கி.மீ தூரம் இருக்கும். நான் ராஜேஷ் வீட்டிற்குச் செல்லும்போது ராஜேஷ்ம் முத்துசாமியும் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல, முத்துசாமி என்னுடன்தான் இருந்தார், ராஜேஷ்ம் என்னுடன் இருந்தார். ராஜேஷ் ன் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதுபற்றி நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன்.

போலிசர் கைபட எழுதிய தாளில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் காவல்நிலையம் சென்றபோது கையெழுத்து வாங்கினார்களா என்றால் சரியல்ல நான் கையொப்பத்தை வீட்டில் வைத்தே போட்டேன். சம்பவ இடத்தில் வைத்துதான் போலிசார் கைபட எழுதிய தாளில் நான் 2 வதாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த தாளில்தான் மேற்படி முத்துசாமி என்பவர் முதலில் கையொப்பம் இட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இதற்கு முன்பாக வேறு எந்த வழக்கிலும் சாட்சியம் அளிக்கவில்லை. ராஜேஷ் என்பவர் எனக்கு நண்பர் என்பதாலும் போலிசார் எனக்கு அறிமுகம் என்பதாலும் இதற்கு முன்பு பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளதாலும் எதிரிக்குஎதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.,B.L.,)
Judicial Magistrate No.II, Pollachi